கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் ( விரைவு நீதிமன்றம் ), விழுப்புரம் .

முன்னிலை - திரு. எஸ். ராஜசிம்மவர்மன், பி.ஏ. பி.எல் ( Hons),

கூடுதல் அமர்வு நீதிபதி.

(விரைவு நீதிமன்றம்),

விழுப்புரம்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ம் நாள் செவ்வாய்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2057 தமிழ் பராபவ ஆண்டு சித்திரை மாதம் 15 ம் நாள்

**குற்ற மேல்முறையீட்டு வழக்கு எண். 19/2026**

**( CNR NO. TNVP01- 001366 - 2026 )**

| | | |
|---|---|---|
| 1/ | எந்த நீதிமன்றத்திலிருந்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது | மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவெண்ணெய்நல்லூர். |
| 2. | அந்த நீதிமன்றத்தின் வழக்கு எண் | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 141/2024 |
| 3. | குற்ற மேல்முறையீட்டு வழக்கு எண் | குற்றமேல்முறையீட்டு வழக்கு எண். 19/2026 |
| 4. | மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகள் பெயர் விவரம் | **1. சிவக்குமார் த/பெ. பிச்சைமுத்து.**<br><br>**2. ஜெயராமன் த/பெ. பிச்சைமுத்து.**<br><br>**3. சத்தியமூர்த்தி த/பெ-. ஜெயராமன் .**<br><br>**4.விஜயரங்கன்** |

| | | |
|---|---|---|
| | | த/பெ. கலியமூர்த்தி.<br><br>அனைவரும் வீரசோழபுரம்,<br>கண்டாச்சிபுரம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். |
| 5. | விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு எந்த சட்டத்தின் கீழ் மற்றும் தண்டனையின் விவரம் | விசாரணை நீதிமன்றம், 1,3,4 எதிரிகள் மீதான இதச பிரிவு. 324 ன் கீழான குற்றத்திற்கு தலா ஓராண்டு காலம் மெய்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ. 10,000/- ( 3 x10,000 = 30,000/-) அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும்,<br><br>2ம் எதிரி மீதான இதச பிரிவு. 294(பி) ன் கீழான குற்றத்திற்கு ரூ. 2000/- அபராதம் விதித்தும் , அபராதம் கட்ட தவறினால் 7 நாட்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் , 2ம் எதிரி மீதான இதச பிரிவு. 326 ன் கீழான குற்றத்திற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ. 10,000/-அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு. 248(2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 6. | விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டதா? தள்ளுபடி செய்யப்பட்டதா ? மாற்றம் செய்யப்பட்டதா? அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டால் அதன் விவரம் | முடிவாக ,<br>1) இந்த மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.<br><br>2) மேல்முறையீட்டாளர் / 2-ம் எதிரிக்கு எதிராக இதச. பிரிவு . 326 பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றம் வழங்கிய சிறை தண்டனை மற்றும் அபராதம் ரத்து செய்யப்படுகிறது.<br><br>3) மேல் முறையீட்டாளர்கள் / 1, 3, 4 எதிரிகளுக்கு எதிராக இதச. பிரிவு . 324 பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றம் வழங்கிய சிறை தண்டனை ரத்து செய்யப்பட்டு அபராத தண்டனையாக மாற்றியமைக்கப்படுகிறது.<br><br>4) மேல்முறையீட்டாளர் / 2-ம் எதிரி இதச. பிரிவு. 324 ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து மேற்படி இதச பிரிவு 324-ன் படியான குற்றச்சாட்டிற்கு ரூ.10,000/- அபராதம் விதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி அபராத தொகையை கட்ட தவறினால் 1 மாத காலம் மெய் காவல் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>5) மேல்முறையீட்டாளர் / 2 ம் எதிரிக்கு |

| | | |
|---|---|---|
| | | இதச பிரிவு. 294(பி) ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.2,000/- அபராதம் விதித்தும், மேற்படி அபராத தொகையை கட்ட தவறினால் 1 வார காலம் மெய் காவல் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>6) மேல் முறையீட்டாளர்கள்/ 1, 3, 4 எதிரிகள் இதச. பிரிவு. 324-ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து, மேற்படி இதச பிரிவு 324-ன் படியான குற்றச்சாட்டிற்கு தலா ரூ.10,000/- அபராதம் விதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி அபராத தொகையை கட்ட தவறினால் 1 மாத காலம் மெய் காவல் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>7) மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகளிடமிருந்து பெறப்படும் அபராத தொகை ரூ. 42,000/-ல் காயமுற்ற அ.சா.1 க்கு ரூ. 20,000/-மும், அ.சா.2, அ.சா.3-க்கு தலா ரூ.10,000/-மும் நஷ்ட ஈட்டு தொகையாக கு.வி.மு.ச பிரிவு. 357(1) ன் படி வழங்க உத்தரவிடப்படுகிறது.<br><br>8) மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகள் அபராத தொகையை செலுத்த 1 மாத கால அவகாசம் அளிக்கப்படுகிறது. எதிரிகள் |

| | | |
|---|---|---|
| | | ஏற்கனவே அபராத தொகையை கட்டியிருந்தால் அந்த அபராத தொகையை கழித்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. அபராத தொகையை கட்ட தவறினால் விசாரணை நீதிமன்றம் அந்த தொகையை வசூலிக்க சிறை தண்டனை நடவடிக்கை எடுக்கலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. |
| 7. | மேல்முறையீடு தாக்கல் செய்த நாள் | 02.03.2026 |
| 8. | மேல்முறையீடு கோப்பிற்கு எடுத்த நாள் | 10.03.2026. |
| 9. | மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகள் ஆஜராவதற்கு நீதிமன்றத்தால் அறிவிப்பு கொடுக்கப்பட்ட நாள் | 18.03.2026 |
| 10 | மேல்முறையீடு விசாரணை நாள் | 10.04.2026 |
| 11. | உத்தரவு நாள் | 28.04.2026. |

இந்த மேல்முறையீடானது 15.04.2026-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர் மேல்முறையீட்டாளர் / குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.ரா.சுப்புராயலு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், மேல்முறையீட்டு விவரக் குறிப்பு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை, மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கும் ,

## தீர்ப்புரை

விசாரணை நீதிமன்றமான திருவெண்ணெய்நல்லூர், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 141/2024 வழக்கில் 06.02.2026 தேதியில், மேல்முறையீட்டாளர்கள் /எதிரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சிறை தண்டனை மற்றும் அபராத தீர்ப்பிற்கு எதிராக, இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) விசாரணை நீதிமன்றத்தில்,21.05.2016 ம் தேதி மாலை 05.00 மணிக்கு 3 வது சாட்சி கௌதம் என்பவர் கிணற்றில் குளிக்க சென்றபோது 1 வது எதிரியின் மகன் ஜெகன் என்பவர் பிரச்சனை செய்துள்ளார். அதை 3 வது சாட்சி தன் தாய் தந்தையான 1,2 சாட்சிகளிடம் வந்து கூறியுள்ளார். 21.05.2016 ம் தேதி 1 வது எதிரி தன் வீட்டிற்கு முன் நின்றிருந்தபோது 1,2 சாட்சிகள் இருவரும் அவரிடம் ஏன் இப்படி உங்க பையன்

என் பையனிடம் பிரச்சனை செய்தான் என்று நியாயம் கேட்டுள்ளார். அதற்கு 1வது எதிரி அருகில் கிடந்த தடியை எடுத்து 2வது சாட்சி தனவேலு என்பவருடைய தலையில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி ஜெயராமன் என்பவர் தடியால் 1வது சாட்சி தனலட்சுமியின் இடது கை மணிக்கட்டிலும், உடம்பிலும் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 3,4 எதிரிகள் இருவரும் 3 வது சாட்சி கௌதமின் இடது கண் புருவத்திலும், உடம்பிலும்தடியால் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், பிறகு மேற்படி எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தேவிடியா மக்களா இன்னிக்கு தப்பிச்சிட்டீங்க என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விட மாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளனர். எனவே 1, 3,4 எதிரிகள் மீது இதச பிரிவுகள். 294(பி), 324, 506(2) இதச படியும், 2 வது எதிரியானவர் இதச பிரிவு. 294(பி), 326, 506(2) இதச படியும், இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம், 1, 3, 4 எதிரிகள் மீதான இதச பிரிவு. 324 ன் கீழான குற்றத்திற்கு தலா ஓராண்டு காலம் மெய்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ. 10,000/- ( 3 x10,000 = 30,000/-) அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 2 ம் எதிரி மீதான இதச பிரிவு. 294(பி) ன் கீழான குற்றத்திற்கு ரூ. 2000/- அபராதம் விதித்தும் , அபராதம் கட்ட தவறினால் 7 நாட்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் , 2 ம் எதிரி மீதான இதச பிரிவு. 326 ன் கீழான குற்றத்திற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை

தண்டனை மற்றும் ரூ. 10,000/-அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் ஒரு வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் கு.வி.மு.ச. பிரிவு. 248(2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சிறை தண்டனை மற்றும் அபராத தீர்ப்பிற்கு எதிராக, விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகளால் தொடரப்பட்ட இந்த மேல்முறையீடு, விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, பெறப்பட்டுள்ளது.

**4) மேல்முறையீட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு:-**

விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் எதிராக உள்ளது. விசாரணை நீதிமன்றம் அரசுத் தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலானவர்களின் முதல் விசாரணையை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளது. அ.சா.1 தனது முதன்மை விசாரணையில், "சிவக்குமார் தடியால் எனது கணவர் தனவேலின் தலையில் அடித்தார். எனது கணவரை அடித்ததால் நான் மறித்துவிட்டேன். அப்போது ஜெயராமன் போடி தேவிடியா உனக்கு என்னடி இங்கு வேலை என்று என்னை அசிங்கமாக திட்டி தடியால் இடதுகை மணிக்கட்டில் அடித்து என் கையை உடைத்துவிட்டார்" என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1-ன் சாட்சியத்தின்படி 2ம் எதிரி அவரை இடது கை மணிக்கட்டில் மரக்கட்டையால் தாக்கியுள்ளார். அதே வாசகம் புகார் வாக்குமூலத்திலும் (அ.சா.ஆ.1) உள்ளது.

அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.7 அளித்த காயச் சான்றிதழிலும் (அ.சா.ஆ.5), முதல் விசாரணையிலும் "அவர் தன்னை 10 நபர்கள் தனது சொந்த ஊரான வீரசோழபுரத்தில் மாலை 6.00 மணியளவில் கைகளால் தாக்கியதாகக் கூறினார். அவரைப் பரிசோதித்தபோது 1. வலது தோள்பட்டையில் வீக்கம் இருந்தது, 2. இடது கையில் 4-வது விரலில் எலும்பு முறிவு இருந்தது." மருத்துவர்/அ.சா.7-ன் சாட்சியத்தின்படி, அ.சா.1-க்கு இடது கை மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்படவில்லை, மாறாக 4-வது விரலில்தான் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் மணிக்கட்டு உடைந்ததாக முரணாகக் கூறியுள்ளார். மேலும், அது மோதிர விரலா? அல்லது ஆள்காட்டி விரலா? என்பதை மருத்துவர் சரியாக குறிப்பிடவில்லை. சிகிச்சையின் போது கைகளால் தாக்கப்பட்டதாகக் கூறிய அ.சா.1, சாட்சியத்தில் மரக்கட்டையால் தாக்கப்பட்டதாக முரணாகக் கூறுகிறார்.

மேலும் அ.சா.2 முதல் விசாரணையில், "எனது மனைவி தனலட்சுமி சண்டையை மறித்து ஏன் என் கணவரை அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது ஜெயராமன் (அ.சா.2) எனது மனைவியை தடியால் இடது கையால் அடித்தார்" என்று கூறியுள்ளார். மேலும் அ.சா.3 முதல் விசாரணையில், "அப்போது எனது அம்மா மறிக்கப் போனபோது எதிரி ஜெயராமன் (2ம் எதிரி) கையில் கட்டையால் அடித்துவிட்டார்" என்று கூறியுள்ளார். இந்தச் சாட்சியங்களை ஆய்வு செய்ததில் அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவரும் அ.சா.1-ன் இடது கை மணிக்கட்டு முறிவு பற்றி எதுவும் கூறவில்லை. குறிப்பாக 4-வது விரல் பற்றி எதுவும் கூறவில்லை. எனவே அ.சா.1-ன் சாட்சியம் சந்தேகத்திற்குரியது. அ.சா.2

சம்பவத்திற்கு பிறகு சிகிச்சைக்காக திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்குச் சென்றார். அவரைப் பரிசோதித்த மருத்துவர் அ.சா.7-டம், 10 தெரிந்த நபர்கள் தன்னைத் தாக்கியதாகக் கூறியுள்ளார். ஆனால் அவர் சம்பவ இடத்தையோ அல்லது எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டார் என்பதையோ கூறவில்லை. ஆனால் முதல் விசாரணையில் 1ம் எதிரி மட்டும் மரக்கட்டையால் தாக்கியதாக முரணாகக் கூறியுள்ளார்.

அதேபோல் அ.சா.3-ம் மருத்துவரிடம் 10 தெரிந்த நபர்கள் தடி மற்றும் கம்பியால் தாக்கியதாகக் கூறியுள்ளார். ஆனால் சம்பவ இடத்தைக் கூறவில்லை. முதல் விசாரணையில் 3 ம் எதிரி மற்றும் 4 ம் எதிரி மட்டும் மரக்கட்டையால் தாக்கியதாகவும், அது 1ம் எதிரி வீட்டின் முன் நடந்ததாகவும் முரணாகக் கூறியுள்ளார். மேலும் அ.சா.3-ன் காயம் குறித்து மருத்துவர் கருத்து ஏதும் தெரிவிக்காததால், அ.சா.2 மற்றும் அ.சா.3-ன் சாட்சியங்கள் சந்தேகத்திற்குரியவையாகும். மேலும், பார்வை மகசர், வரைபட சாட்சிகள் அ.சா.5 மற்றும் அ.சா.6 பிறழ் சாட்சிகளாக மாறியதால், சம்பவம் நடந்த இடமே சந்தேகத்திற்குரியதாக உள்ளது. மேலும், தனிப்பட்ட சாட்சி அ.சா.4 பிறழ் சாட்சியாக மாறியதால், இந்த வழக்கில் நேரில் கண்ட சாட்சிகள் எவருமில்லை. இந்த வழக்கில் புலனாய்வு அதிகாரி அ.சா.8 ஆயுதத்தை பறிமுதல் செய்யவில்லை. மேலும் அ.சா.1-க்கு மணிக்கட்டிலா? அல்லது விரலிலா? காயம் ஏற்பட்டது என்பதை நிரூபிக்க எக்ஸ்-ரே (X-ray) தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த வழக்கில் இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன: ஒன்று எதிரிக்கு ஆதரவானது, மற்றொன்று அரசுத் தரப்பின் உறுதிப்படுத்தப்படாத சாட்சியம். இத்தகைய சூழ்நிலையில் எதிரிக்கு ஆதரவான சாத்தியக்கூறுகளையே எடுத்துக்கொள்ள வேண்டும் மற்றும் அதன் பலன் எதிரிக்கு/மேல்முறையீட்டாளருக்குச் சேர வேண்டும். பிரிவு 313 Cr.P.C-ன் கீழ் எதிரியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யும் போது விசாரணை நீதிமன்றம் முறையான நடைமுறையைப் பின்பற்றவில்லை. எனவே இந்த மேல்முறையீட்டு வழக்கானது விசாரணை நீதிமன்றமான திருவெண்ணெய்நல்லூர் மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆண்டு பட்டிகை வழக்கு எண். 141/2024-ல் பிறப்பித்த தண்டனை தீர்ப்பை ரத்து செய்து, எதிரிகள்/மேல்முறையீட்டாளர்களை விடுதலை செய்யக்கோரியும், மேல்முறையீட்டை அனுமதிக்க கோரியும், செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) இந்த மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,**

1)அரசு தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(பி), 324, 326, 506(2) -ன் படியான குற்றச்சாட்டுகளை, நிரூபணம் செய்துள்ளதா?

2) மேல்முறையீட்டாளர்/எதிரியை குற்றவாளி என விசாரணை நீதிமன்றம் சரிவர முடிவு செய்துள்ளதா?

3) விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை ரத்து செய்யத்தக்கதா?

**6) பிரச்சினை எண்கள்- 1 முதல் 3-க்கான பரிசீலனையும், தீர்வும்:-**

(i) மேல்முறையீட்டாளர் தரப்பு வாதத்தின் முக்கிய சாராம்சங்கள்:-

இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட வாதங்களை முன் வைத்துள்ளார். அவையாவன.

1)விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களை மேலோட்டமாக அணுகி, அரசுத் தரப்பு சாட்சிகளின் முதல் விசாரணையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தண்டனை வழங்கியுள்ளது. இது சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

2) அ.சா.1-ன் சாட்சியத்தில் முரண்பாடுகள் உள்ளன. அ.சா.1 தனது சாட்சியத்தில் "மணிக்கட்டு" உடைந்ததாகக் கூறுகிறார். ஆனால் மருத்துவச் சான்றிதழ் (அ.சா.ஆ.5) மற்றும் மருத்துவரின் சாட்சியம் (அ.சா.7) ஆகியவற்றின் மூலம் "4-வது விரலில்" மட்டுமே எலும்பு முறிவு ஏற்பட்டதாக தெரிய வருகிறது.

2) சம்பவத்தின் போது "மரக்கட்டையால்" தாக்கியதாக அ.சா.1 தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் மருத்துவரிடம் சிகிச்சை பெறும்போது "கைகளால்"

தாக்கியதாகக் கூறியுள்ளார். இது வழக்கின் அடிப்படைத் தன்மையையே மாற்றுகிறது.

3) அ.சா.1 புகாரில் குறிப்பிட்ட நபர்களுக்கும், மருத்துவரிடம் சொன்ன நபர்களின் எண்ணிக்கைக்கும் (10 நபர்கள்) இடையே பெரும் வித்தியாசம் உள்ளது. அதற்கான விளக்கம் எதுவும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை.

4) இந்த வழக்கில் சாட்சிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதை நிரூபணம் செய்ய மருத்துவச் சான்றுகள் மற்றும் அறிவியல் பூர்வ ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. எலும்பு முறிவு (Grievous Hurt) போன்ற கடுமையான காயங்களுக்கு எக்ஸ்-ரே அறிக்கை மிக முக்கியமானது. இந்த வழக்கில் எக்ஸ்-ரே தாக்கல் செய்யப்படாதது, அ.சா.1-க்கு எலும்பு முறிவு ஏற்பட்டதா? என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

5) எலும்பு முறிவு ஏற்பட்டது மோதிர விரலிலா? அல்லது ஆள்காட்டி விரலிலா? என்பதில் மருத்துவருக்கே தெளிவில்லை.

6) அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்கள் அ.சா.1-ன் காயத்தைப் பற்றி (மணிக்கட்டு அல்லது விரல் முறிவு) எதையும் குறிப்பிடவில்லை. அ.சா.2 மருத்துவரிடம் 10 பேர் தாக்கியதாகக் கூறிவிட்டு, நீதிமன்றத்தில் 1-ம் எதிரி மட்டும் தாக்கியதாகக் கூறுவது முன்னுக்குப் பின் முரணானது.

7) அ.சா.3 சம்பவ இடத்தைப் பற்றி மருத்துவரிடம் கூறவில்லை, ஆனால் நீதிமன்றத்தில் 1-ம் எதிரி வீட்டின் முன் நடந்ததாகக் கூறுகிறார்.

8) வழக்கில் புலனாய்வு மற்றும் நடைமுறை குறைபாடுகள் உள்ளது. பார்வை மகசர் மற்றும் வரைபட சாட்சிகள் (அ.சா.5, அ.சா.6) பிறழ் சாட்சிகளாக (Hostile) மாறியதால், குறிப்பிட்ட இடத்தில் தான் சம்பவம் நடந்ததா? என்பதில் சந்தேகம் எழுகிறது.

9) இந்த வழக்கில் குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மரக்கட்டை அல்லது தடியை புலனாய்வு அதிகாரி (அ.சா.8) பறிமுதல் செய்யவில்லை.

10) இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட ஒரே ஒரு தனிப்பட்ட சாட்சியான அ.சா.4 பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். வழக்கில் உள்ள அனைவரும் நெருங்கிய உறவினர்கள்/தொடர்புடையவர்கள் மட்டுமே. நடுநிலையான சாட்சிகள் எவருமில்லை.

11) பிரிவு 313 Cr.P.C-ன் படி எதிரியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யும் போது, அவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து விளக்கம் அளிக்க விசாரணை நீதிமன்றம் தவறியுள்ளது. இது இயற்கை நீதிக்கு எதிரானது.

12) ஒரு வழக்கில் இரண்டு விதமான சாத்தியக்கூறுகள் இருக்கும்போது, அதில் எதிரிக்கு சாதகமான முடிவையே நீதிமன்றம் எடுக்க வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

13) மேற்கண்ட முரண்பாடுகளைக் கவனிக்கும்போது, அரசுத் தரப்பு தனது வழக்கைத் தர்க்கரீதியாகவும், சட்டப்பூர்வமாகவும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு (Beyond reasonable doubt) நிரூபிக்கத் தவறிவிட்டது என்பது தெளிவாகிறது.

14) எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தில், இந்த பொய்யான புகார் அளிக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டை அனுமதித்து, மேல்முறையீட்டாளர்களைக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்ய வேண்டும்.

**7) எதிர் மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பு வாதத்தின் முக்கிய சாராம்சங்கள்:-**

1)குற்றவியல் வழக்குகளை பொறுத்தவரையில், விசாரணை நீதிமன்றம் திருப்தியடையும் பட்சத்தில், ஒரே ஒரே சாட்சியத்தின் அடிப்படையில் கூட தண்டனை வழங்கலாம். சாட்சியத்தின் தரத்தினை பார்க்க வேண்டுமே தவிர, சாட்சிகளின் எண்ணிக்கையை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அரசு தரப்பு தனது வழக்கை சந்தேகத்திடமின்றி நிரூபிக்க வேண்டுமே தவிர, அனைத்து சந்தேகங்களையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை.

2) உறுதியூட்டிய சாட்சிகள் அனைத்தும் பாரபட்சமான சாட்சிகள் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு எதிரான எண்ணம் கொண்டவர்கள் என்பது உண்மையல்ல.

3) சாட்சிகள் அனைத்தும் தயார் செய்யப்பட்ட சாட்சிகள் என்பது உண்மையல்ல. அவையனைத்தும் இயற்கையான சாட்சிகளாகும்.

4) இந்த வழக்கில் சம்பவத்தின் போது எதிரிகள்தான் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களுக்கு காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. காயம் பட்ட சாட்சிகளின் சாட்சியமானது மருத்துவ சாட்சியத்தின் மூலமும், காயச்சான்றிதழின் (விபத்து பதிவேட்டு நகல்) மூலமும், நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

5) சாட்சிகள் மற்றும் எதிரிகள் நெருங்கிய உறவினர்கள் என்பதால், எதிரிகளை அடையாளம் காண்பதில் தவறு நடக்க வாய்ப்பில்லை. அ.சா1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய மூவரும் முதல் விசாரணையில் தங்களைத் தாக்கியவர்களைத் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளனர்.

6) அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் காயம்பட்ட சாட்சிகள் என்பதால், அவரது

சாட்சியங்கள் தூய்மையான மற்றும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். அவர்களது சாட்சியங்களை நீதிமன்றம் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

7) பிரிவு. 313 கு.வி.மு.ச படியான கேள்வியின் போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்தார்களே தவிர, எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை. இது குறித்து எதிரிகள் தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

8) விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களை பரிசீலித்த பிறகு, சட்டப்படிதான் எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானித்துள்ளது. எதிரிகள் கூறுவது போல விசாரணை நீதிமன்றம் அனுமானத்தின் அடிப்படையிலோ, அல்லது கற்பனையின் அடிப்படையிலோ, வழக்கை குறித்து தீர்மானிக்கவில்லை. அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர்.

9) விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**8)** இரு தரப்பு வாதங்களின் அடிப்படையிலும், அரசு தரப்பு சாட்சிகளின் அடிப்படையிலும், குறிப்பாக புகார்தாரர்/காயம்பட்ட நபரின் சாட்சியின் சாட்சியத்தின் அடிப்படையிலும், மற்ற காயம்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையிலும், கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையிலும், மருத்துவ சாட்சியத்தின் அடிப்படையிலும், இதுகுறித்த இதர சாட்சியங்களின் சாட்சியத்தின் அடிப்படையிலும், காயச்சான்றின் அடிப்படையிலும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை சரியானதா? என்பதைக் குறித்து, பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்றே இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் கருதுகிறது.

**9) புகார்தாரர் / காயம்பட்டவரின் சாட்சியம் மற்றும் பாதிக்கப்பட்ட மற்ற சாட்சிகளின் சாட்சியம்:-**

இந்த வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர்/காயம்பட்ட சாட்சி தனலட்சுமி என்பவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில் "தற்போது வீரசோழபுரத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், 1 முதல் 4 எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் எனது உறவினர்கள் என்றும், 2016-ம் ஆண்டு மே மாதம் 26 ம் தேதி மதியம் 1 மணியளவில் தனது மகள் கௌதமன் கிணற்றுக்கு குளிப்பதற்காக சென்றார் என்றும், அப்போது தனது மகனுக்கும், 1 எதிரி சிவக்குமாரின் மகன் ஜெகன்ராஜுக்கும் தகராறு ஏற்பட்டது என்றும், தனது மகன் கௌதமன் வீட்டிற்கு வந்து ஜெகன்ராஜ் தன்னை அசிங்கமாக திட்டி அடித்ததாக என்னிடம் கூறினார் என்றும், தானும், தன் கணவரும் அது சம்பந்தமாக சிவக்குமார் வீட்டிற்கு

சென்று தனது மகனை ஏன் அடித்தீர்கள் என்று கேட்டோம் என்றும், அப்போது தான் ஒன்று பேச அவர் ஒன்று பேச அங்கு தங்களுக்குள் தகராறு ஏற்பட்டது என்றும், சிவக்குமார் தடியால் தனது கணவர் தனவேலின் தலையில் அடித்தார் என்றும், தனது கணவரை அடித்ததால் நான் மறித்துவிட்டேன் என்றும், அப்போது ஜெயராமன் போடி தேவடியா உனக்கு என்னடி இங்க வேலை என்று தன்னை அசிங்கமாக திட்டி, தடியால் இடது கை மணிக்கட்டில் அடித்து தன் கையை உடைத்துவிட்டார் என்றும், தனது மகன் கௌதமையும், விஜயரங்கன், சத்தியமூர்த்தி, ஆகியோர் தடியால் அடித்து இடது கண்ணில் அடித்ததில் இடது கண் கிழிந்துவிட்டது என்றும், உன்னால் என்ன செய்ய முடியுமோ செஞ்சுக்கடி இனிமேல் உங்கள் உயிர் என் கையில்தான் என்று எதிரிகள் 4 பேரும் மிரட்டினார்கள் என்றும், அடிபட்ட தானும், தனது கணவர், தனது மகள், ஆகியோர் திருக்கோயிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், தான் நடந்தவற்றை கூறினேன் என்றும், வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் (அ.சா.ஆ.1) உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் ” என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட அ.சா.1-ன் கணவரும், மற்றொரு காயம்பட்ட சாட்சியுமான தனவேல் என்பவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில், “தான் தற்போது வீரசோழபுரத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், 1 முதல் 4 எதிரிகளை தெரியும். அவர்கள் தனது உறவினர்கள்

என்றும், அ.சா. 1 தனது மனைவி என்றும், 2016-ம் ஆண்டு சம்பவம் நடந்தது என்றும், மாலை 5.00 மணியளவில் சிவக்குமார் வீட்டின் அருகே சம்பவம் நடந்தது என்றும், சிவக்குமார் மகனும் தன் மகன் கௌதமும் கிணற்றின் அருகே சண்டை போட்டு கொண்டார்கள் என்றும், தனது மகள் அழுது கொண்டு வந்தார் என்றும், அதை பற்றி கேட்பதற்காக தானும், தனது மனைவியும், சிவக்குமார் வீட்டிற்கு சென்றிருந்தபோது சிவக்குமார் தன்னை தடியால் தலையில் அடித்தார் என்றும், தனது மனைவி தனலட்சுமி சண்டையை மறித்து ஏன் என் கணவரை அடிக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு ஜெயராமன் தனது மனைவியை தடியால் இடது கையில் அடித்தார் என்றும், தனது மகன் கௌதமையும், சத்தியமூர்த்தி, விஜயரங்கனும் தடியால் கண்ணில் அடித்ததில் கண் கலங்கிவிட்டது. வலது கண்ணா? இடது கண்ணா? என்று தற்போது ஞாபகம் இல்லை என்றும், எதிரிகள் அனைவரும் தங்களை அசிங்கமாக பேசி பொண்டாட்டியை வெட்டாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தனர் என்றும், அடிபட்ட தானும், தன் மனைவியும், தன் மகனும், திருக்கோயிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 தம்பதியரின் மகனான கௌதம் என்பவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில், "தான் தற்போது வீரசோழபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 21.05.2016-ம் தேதியன்று சாயந்தரம்

05.00 மணியளவில் தானும், 1வது எதிரி சிவக்குமார் கிணற்றில் குளிக்கப்போயிருந்தோம் என்றும், அப்போது சிவக்குமாரின் பையன் தன்னை அடித்துவிட்டார் என்றும், அதை தான் போய் தனது அப்பா அம்மாவிடம் சொன்னேன் என்றும், அவர்கள் வாடா போய் கேட்கலாம் என்று சொல்லி என்னை இட்டுக்கொண்டு போனார்கள் என்றும், அப்போது அவருடைய வீட்டு வாசலில் போய் கேட்கும்போது தனது அப்பாவை கட்டையை தூக்கி மண்டையில் சிவக்குமார் அடித்துவிட்டார் என்றும், அப்போது தனது அம்மா மறிக்க போனபோது எதிரி ஜெயராமன் என்பவர் தேவிடியா என்று சொல்லி கையில் கட்டையால் அடித்துவிட்டார் என்றும், தன்னை சத்தியமூர்த்தி, கலியமூர்த்தி அவரது மகன் விஜயரங்கன் ஆகியோர்கள் கட்டையால் தனது இடது கண்ணில் அடித்துவிட்டார்கள் என்றும், பின்பு ஆட்கள் வந்து தனது அப்பா, அம்மாவை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும், தன்னை தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்.

**10) புகார்தாரரின் காயத்தை குறித்தும், சம்பவம் குறித்தும், மற்ற கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியம்:-**

இந்த வழக்கில் அ.சா.4 ஆக மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக ஏழுமலை என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனிப்பட்ட சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில், "தான் வீரசோழபுரத்தில் வசித்து பெங்களூரில் பூ

மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன் என்றும், எதிரிகளை தெரியும் என்றும், அசா. 1, 2-யை தெரியும் என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், தான் அந்த சமயத்தில் பெங்களூரில் இருந்தேன். போலீசார் விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். இது அரசு தரப்பு வழக்கை முற்றிலும் பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. மேலும் இந்த சாட்சியத்தை ஆய்வு செய்யும் போது, குற்றச் சம்பவம் நடந்தபோது தான் அந்த இடத்திலேயே இல்லை என்றும், பெங்களூரில் இருந்ததாகவும் கூறி, தான் நேரில் பார்த்த சாட்சி (Eye Witness) என்பதை தனிப்பட்ட சாட்சியான அ.சா.4 மறுத்துவிட்டார். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் நெருங்கிய உறவினர்கள் என்ற நிலையில், தனிப்பட்ட கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு சற்று பாதகமாகவே அமைந்துள்ளது. எவ்வாறு இருப்பினும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் காயம் பட்ட சாட்சிகள் என்பதால், அ.சா.4-ன் சாட்சியத்தை வைத்து அவர்களது சாட்சியத்தை புறந்தள்ளி விட இயலாது.

**11) காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரின் சாட்சியம்:-**

இந்த வழக்கில் அ.சா.7.ஆக விசாரிக்கப்பட்ட டாக்டர் ஆர். ரேவதி தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில் “தான் கடந்த 21.05.2016 அன்று இரவு 07.30 மணியளவில் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்த போது, தனவேலு தனது மகன் கௌதம் என்பவருடன் அவசர சிகிச்சை பிரிவிற்கு சிகிச்சைக்காக வந்தார். அவரை 10 நபர்கள் தன்னுடைய சொந்த ஊரான

வீரசோழபுரத்தில் மாலை 06.00 மணியளவில் அதே தினத்தில் தன்னை தாக்கியதாக கூறினார் என்றும், அவரை தான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும்,

1)முன்னந்தலையில் லேசான கிழிந்த காயம் காணப்பட்டது.

2)தலையில் வீக்க காயம் காணப்பட்டது.

அவருக்கு தான் 01.06.2016 அன்று மேற்கண்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன் என்றும், தான் வழங்கிய காயச்சான்று அசா.ஆ.3 ஆகும் என்றும்,

மேலும் அன்று இரவு 07.45 மணியளவில் தான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்த போது கௌதம், வயது 16 அவருடைய தந்தை தனவேலு என்பவருடன் அவசர சிகிச்சை பிரிவிற்கு சிகிச்சைக்காக வந்தார் என்றும், அவரை மாலை 06.00 மணியளவில் சொந்த ஊரான வீரசோழபுரத்தில் இரும்பு தடி மற்றும் கட்டை கொண்டு 10 நபர்கள் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை தான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும்,

1)இடது கண்ணில் வீக்க காயம் காணப்பட்டது.

2) இடது கண்ணில் ரத்தம் உறைந்த நிலையில் காணப்பட்டது.

3) பார்வைத் திறன் இரண்டு அடிக்கு கீழாக இருந்தது.

அவரை தான் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைத்து விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு போலீசார் தன்னை

31.08.2016 அன்று விசாரித்த போது, மேல் சிகிச்சைக்கான ஆதாரம் எதுவும் காண்பிக்கவில்லை என்றும், அதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து தான் கருத்துரை எதுவும் வழங்கவில்லை என்றும், தான் வழங்கிய விபத்து பதிவேடு அசா.ஆ.4 ஆகும் என்றும்,

மேலும் அன்று இரவு 09.25 மணியளவில் தான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்த போது 35 வயது மதிக்கத்தக்க தனலட்சுமி தனது கணவர் தனவேலு என்பவருடன் அவசர சிகிச்சை பிரிவிற்கு சிகிச்சைக்காக வந்தார் என்றும், அவர் தன்னை 10 நபர்கள் தனது சொந்த ஊரான வீரசோழபுரத்தில் மாலை 06.00 மணியளவில் கைகளைக் கொண்டு தாக்கியதாக கூறினார் என்றும், அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது:

1)வலது தோள் பட்டையில் வீக்க காயம் இருந்தது.

2)இடது கையில் 4-ம் விரலில் எலும்பு முறிவு இருந்தது.

என்றும், அவருக்கு 01.06.2016 அன்று அவருடைய சிகிச்சை விவரங்களை பார்த்து மேற்கண்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கினேன் என்றும், தான் வழங்கிய காயச்சான்றிதழ் அசா.ஆ.5 ஆகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>12) புகார்தாரர் மற்றும் காயம்பட்டவரின் சாட்சியம், மற்ற காயம்பட்டவர்களின் சாட்சியம், மருத்துவ சாட்சியம் மற்றும் இதர சாட்சிகளின் சாட்சியங்களின் மூலமும், சான்றாவணங்களின் மூலமும், அரசு தரப்பு வழக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?</u>**

இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களை குறிப்பாக புகார்தாரர்/காயம்பட்ட சாட்சி மற்றும் இதர காயம்பட்ட சாட்சிகள் ஆகியோர்களின் சாட்சியங்களை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்க்கும்போது, மேற்படி அ.சா.1 தனது சாட்சியத்தில் "எதிரிகள் நால்வரையும் ஏற்கனவே தெரியும் (உறவினர்கள்) என்று அடையாளம் காண்பித்துள்ளார். மேலும் அவர் தனது சாட்சியத்தில் கிணற்றில் ஏற்பட்ட சிறிய தகராறு, அதுகுறித்து விசாரிக்கச் சென்றபோது ஏற்பட்ட பெரிய மோதல், பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை மற்றும் வாக்குமூலம் என நிகழ்வுகள் குறித்து கோர்வையாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தடியால் அடித்தது மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட காயங்கள் (மணிக்கட்டு உடைந்தது, கண் கிழிந்தது) ஆகியவற்றைக் குறித்தும் அவர் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகாரில்(அ.சா.ஆ.1) உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அ.சா.1 உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த வழக்கில் மற்றொரு காயம் பட்ட சாட்சியான அ.சா.1-ன் கணவர் தனவேல் (அ.சா.2) தனது சாட்சியத்தில், 2016-ல் தனது மகன் கௌதமுக்கும், எதிரி

சிவக்குமாரின் மகனுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்து, சிவக்குமார் வீட்டிற்குச் சென்றபோது மோதல் ஏற்பட்டதாகவும், எதிரி சிவக்குமார் தன்னைத் தடியால் தலையில் அடித்ததாகவும், எதிரி ஜெயராமன் தனது மனைவி தனலட்சுமியின் இடது கையில் தடியால் அளித்ததாகவும், எதிரிகள் சத்தியமூர்த்தி மற்றும் விஜயரங்கன் ஆகியோர் தனது மகன் கௌதமின் கண்ணில் தடியால் அளித்ததாகவும், எதிரிகள் அனைவரும் தங்களை ஆபாசமாகத் திட்டி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும், காயமடைந்த தானும், தனது மனைவி மற்றும் மகனும் திருக்கோயிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் மற்றொரு காயம்பட்ட சாட்சியும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் மகனான அ.சா.3 கௌதம் தனது சாட்சியத்தில், "21.05.2016 அன்று மாலை 5.00 மணியளவில் சம்பவம் நடந்ததாகவும், முதல் எதிரி சிவக்குமார் தனது அப்பாவை மண்டையில் கட்டையால் அடித்ததாகவும், ஜெயராமன் தனது அம்மாவை அடித்ததாகவும், சத்தியமூர்த்தி, கலியமூர்த்தி மற்றும் விஜயரங்கன் ஆகியோர்கள் தன்னைத் தாக்கியதாகவும், தாக்குதலால் தனது இடது கண்ணில் காயம் ஏற்பட்டதாகவும், பெற்றோர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்கள் காயம்பட்ட சாட்சிகள் என்பதால், அவர்களது சாட்சியங்களானது

இயற்கையாகவே வலுமிக்க சாட்சியங்கள் ஆகும். பொதுவாக காயமடைந்த சாட்சிகளின் வாக்குமூலம் மிகவும் வலுவானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அவர்கள் சம்பவ இடத்தில் இருந்ததால்தான் காயம் ஏற்பட்டுள்ளது என்பது இயல்பாகவே உறுதி செய்யப்படுகிறது. மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயங்களை குறித்து அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் தனது சாட்சியத்தில் காயம் அடைந்த மூன்று நபர்களும் (தனவேலு, கௌதம், தனலட்சுமி) குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றதை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனலட்சுமிக்கு ஏற்பட்ட காயம் "கொடுங்காயம்" (Grievous Injury) என்றும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களுக்கு சொற்ப காயம் ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளார். எனவே காயம் பட்ட சாட்சிகளின் சாட்சியமானது மருத்துவ சாட்சியத்தின் அடிப்படையிலும் உறுதியூட்டப்பட்டுள்ளது. எனவே அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் தான் ஏற்பட்டுள்ளது என்பது, இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியங்களின் மூலமும், மருத்துவரின் சாட்சியத்தின் மூலமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13) இந்த வழக்கில் எதிரிகள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது போல, அ.சா.1 தனது சாட்சியத்தில் "மணிக்கட்டு" உடைந்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் மருத்துவச் சான்றிதழ் (அ.சா.ஆ.5) மற்றும் மருத்துவரின்

சாட்சியம் (அ.சா.7) ஆகியவற்றின் மூலம் "4-வது விரலில்" மட்டுமே எலும்பு முறிவு ஏற்பட்டதாக தெரிய வருகிறது. இந்த சங்கதி முரண்பாடாகவே உள்ளது. அதேபோல் சம்பவத்தின் போது "மரக்கட்டையால்" தாக்கியதாக அ.சா.1 தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் மருத்துவரிடம் சிகிச்சை பெறும்போது "கைகளால்" தாக்கியதாகக் கூறியுள்ளார். மேலும் அ.சா.1 புகாரில் குறிப்பிட்ட நபர்களுக்கும், மருத்துவரிடம் சொன்ன நபர்களின் எண்ணிக்கைக்கும் (10 நபர்கள்) இடையே பெரும் வித்தியாசம் உள்ளது. அதற்கான விளக்கம் எதுவும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்கள் அ.சா.1-ன் காயத்தைப் பற்றி (மணிக்கட்டு அல்லது விரல் முறிவு) எதையும் குறிப்பிடவில்லை.

14) அ.சா.2 மருத்துவரிடம் 10 பேர் தாக்கியதாகக் கூறிவிட்டு, நீதிமன்றத்தில் 1-ம் எதிரி மட்டும் தாக்கியதாகக் கூறுவது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. மேலும் இந்த வழக்கில் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மரக்கட்டை அல்லது தடியை புலனாய்வு அதிகாரி (அ.சா.8) பறிமுதல் செய்யவில்லை. மேலும் மிகவும் கால தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற எதிரிகள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பு வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது. மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் அரசு தரப்பிற்கு பாதகமாகத்தான் அமைந்துள்ளது. எனினும் மேற்கண்ட முரண்பாடுகள் மட்டுமே அரசு தரப்பில் எதிரிகள்/மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லை.

15) மேற்படி காயம்பட்ட சாட்சிகள் தங்களுக்கு ஏற்பட்ட காயத்தை குறித்தும், அந்த காயத்தை எதிரிகள் தான் ஏற்படுத்தினார்கள் என்பது குறித்தும், எதிரிகள் தங்களை ஆபாச வார்த்தைகள் பேசி தாக்கினார்கள் என்பது குறித்தும், சம்பவ இடம் குறித்தும், சம்பவத்திற்கான முன் விரோதம் குறித்தும், தெளிவாக சாட்சியமளித்துள்ளார்கள். அந்த சாட்சியமானது மருத்துவரின் சாட்சியத்தால் உறுதியூட்டப்பட்டுள்ளது. எனவே அவர்களது சாட்சிகளை புறந்தள்ள இயலவில்லை. காயம் பட்ட சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் உள்ள சிறிய முரண்பாடுகளை வைத்து அவர்களது சாட்சியத்தை ஒட்டுமொத்தமாக ஒதுக்கி விட முடியாது என்பது நன்கு அமைந்துவிட்ட சட்ட விதியாகும். எனவே மேற்கண்ட அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.7(மருத்துவர்) ஆகியோர்களின் சாட்சியங்களை குறித்து அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள வாதம் எவ்வகையிலும் ஏற்புக்குரியது அல்ல என்று இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் காயம் பட்ட சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் நிலையில், தனிப்பட்ட சாட்சியான அ.சா.4 பிறழ் சாட்சியமாக மாறியுள்ளது எந்த வகையிலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.5-ஆக விசாரிக்கப்பட்ட பார்வை மகசர் சாட்சி சுப்பராயன் தனது சாட்சியத்தில் "தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதல்ல. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் விசாரணை செய்யவில்லை" என்று சாட்சியம் அளித்து

பிறழ் சாட்சியமாக மாறியுள்ளார். அதேபோல் இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.6-ஆக விசாரிக்கப்பட்ட மற்றொரு பார்வை மகசர் சாட்சி வெங்கடேசன் தனது சாட்சியத்தில் "தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ-2 ஆகும். மேற்படி எனது கையெழுத்து நான் எங்கு, எப்போது போட்டேன் என்று ஞாபகம் இல்லை. வெள்ளைப் பேப்பரில் தான் கையெழுத்து போட்டேன்." என்று சாட்சியமளித்து பிறழ் சாட்சியமாக மாறியுள்ளார்.

17) மேற்படி அ.சா.5, 6 ஆகிய பார்வை மகசர் சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கை சற்று பலவீனப்படுத்தினாலும், மேற்படி சாட்சியமானது எந்த வகையிலும் அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்களை பாதிக்கும் வகையில் அமையவில்லை. எனவே மேற்கண்ட காயம் பட்ட சாட்சிகள் மற்றும் மருத்துவர் சாட்சியத்தின் அடிப்படையில், அரசு தரப்பு சாட்சிகளுக்கு 1, 3, 4 எதிரிகள் சொற்ப காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று 1, 3, 4 மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், 1, 3, 4 எதிரிகள் இ.த.ச.பிரிவு 324-ன் படி தண்டிக்கப்படத்தக்கவர்கள் என்று இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இதுகுறித்த விசாரணை நீதிமன்றத்தின் கருத்துரையை இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கிறது.

18) அசா.1 தனது சாட்சியத்தில், "ஜெயராமன் போடி தேவிடியா உனக்கு என்னடி இங்கு வேலை என்று அசிங்கமாக திட்டினார்" என்று சொல்லியுள்ளார். இதை உறுதிப்படுத்தும் விதமாக அவரது மகனான அசா.3 ன் சாட்சியத்தில் எதிரி ஜெயராமன் என்பவர் தேவிடியா என்று சொல்லி கையில் கட்டையால் அடித்தார் என்று சொல்லியுள்ளது அசா.1 ன் சாட்சியத்தை ஒத்துள்ளதாலும், இந்த வார்த்தைகளை கேட்கும் யாருக்கும் அவமானம் தொந்தரவு ஏற்படும் என்பதாலும், இந்த வழக்கில் அசா.1 ஆன அசா.3 ன் தாயை மேற்கண்ட வார்த்தைகளைச் சொல்லி திட்டும்போது அதனை கேட்கும் மகனான அசா.3 க்கு அவமானம் தொந்தரவு ஏற்படவே செய்யும். மேலும், அசா.1 ன் சாட்சியத்தில், வீட்டுக்கு சென்று கேட்டதாகவும், அசா.2, அசா.3 தனது சாட்சியத்தில், வீட்டு வாசலில் போய் கேட்டபோது சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. வீட்டுக்குள் சம்பவம் நடந்ததாக அரசு தரப்பிலோ, எதிரிகள் தரப்பிலோ எந்த வாதமும் முன் வைக்கப்படவில்லை.

19) மேலும் இத.ச.பிரிவு 294(பி) பிரிவானது "ஏதாவது ஒரு பொது இடத்தில் அல்லது அதன் அருகில் ஆபாசமாகப் பேசுவது, பாடுவது அல்லது வார்த்தைகளை உச்சரித்து மற்றவர்களுக்கு எரிச்சல் ஊட்டுவதைத் தடுக்கும் சட்டப்பிரிவு" என்று உள்ள நிலையில் வீட்டிற்கு வெளியே இருந்தாலும், அசா.1-யை மேற்கண்ட வார்த்தையைச் சொல்லி திட்டும்போது பாதிக்கப்பட்டவர்களான அசா.1 ன் கணவர் மற்றும் மகனான அசா.2, அசா.3 ஆகியோர்களுக்கு தொந்தரவு, அவமானம் ஏற்படவே செய்யும் என்பதால் இதைப் பொறுத்து எதிரிகள் தரப்பு வாதம் ஏற்கத்தக்கல்ல என

இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்து, 2-ம் எதிரி மீதான இத.ச.பிரிவு 294(பி) படியான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மற்ற எதிரிகள் மீதான இத.ச.பிரிவு 294(பி) படியான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றும், இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இதுகுறித்த விசாரணை நீதிமன்றத்தின் கருத்துரையை இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கிறது.

20) எதிரிகள் அசா.1 முதல் அசா.3 வரையிலானவர்களைப் பார்த்து உன்னால் என்ன செய்ய முடியுமோ செஞ்சுக்கடி, இனிமேல் உங்கள் உயிர் என் கையில்தான் என்றைக்கா இருந்தாலும் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் சொல்லவில்லை என்பதாலும், எதிரிகள் பயன்படுத்தியதாக கூறப்படும் ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்பதாலும், எதிரிகள் மீதான இத.ச பிரிவு 506(2) கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்கிறது. இதுகுறித்த விசாரணை நீதிமன்றத்தின் கருத்துரையை இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கிறது.

21) இந்த வழக்கில் மேற்படி 2-ம் எதிரியால் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயமா? என்பதை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்க்கும்போது. இந்த வழக்கில் அ.சா.ஆ. 5 ஆக அ.சா.7 மருத்துவர் வழங்கிய காயசான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் மேற்படி அ.சா.1ன் இடது கையில் 4-ம் விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதை காண்பிக்க நுண்கதிர் படம் எதுவும் அரசு தரப்பில்

சமர்ப்பிக்கப்படவில்லை. அரசு தரப்பில் அ.சா.1ன் இடது கையில் 4-ம் விரலில் எலும்பு முறிவு இருப்பதாக வாதம் முன் வைக்கப்பட்டு இருந்தாலும் அந்த வாதம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. அ.சா.1 க்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம்

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS DATED : 28.03.2022 CORAM THE HONOURABLE MR.JUSTICE R.PONGIAPPAN Crl.A.No.57 of 2019 Kumar ...Appellant/accused Vs. State by Inspector of Police, Edaiyur Police Station, (Cr.No.132 of 2008) ...Respondent

என்ற வழக்கின் முன் தீர்ப்பில்,

4. More than that it is a case, in the wound certificate issued in respect to the injury sustained by P.W.2, the doctor has stated that the injury No.1 (contusion over right shoulder size 3x4 cm) is a grievous one. On the other hand, while at the time of giving evidence as P.W.8, he has stated that for the injury sustained by P.W.2, X-ray has been taken wherein there was no fracture found.

15. Now on going through the said evidence with the nature of injury sustained by P.W.2, it would be necessary to see whether the said injury comes under the head of 320 of IPC. In fact, Section 320 of IPC which is narrated as follows:

320. Grievous hurt The following kinds of hurt only are designated as "grievous":

First – Emasculation. Secondly - Permanent privation of the sight of either eye.

Thirdly - Permanent privation of the hearing of either ear,

Fourthly - Privation of any member or joint.

Fifthly - Destruction or permanent impairing of the powers of any member or joint.

Sixthly - Permanent disfiguration of the head or face.

Seventhly - Fracture or dislocation of a bone or tooth.

Eighthly - Any hurt which endangers life or which causes the sufferer to be during the

space of
twenty days in severe bodily pain, or unable to follow
his ordinary pursuits.

16. Now on applying the definition of grievous hurt with the evidence given by the doctor, here it is a case, there was no resemblance that the injury sustained by the P.W.2 in the neck is having the character of grievous in nature. Therefore, non recovery of weapons used at the time of occurrence, coupled with the fact that the injury sustained by P.W.2 is not a grievous hurt, convicting the accused under Section 326 of IPC is erroneous one.

என்று வழி காட்டுதல் வழங்கியுள்ளது.

22) மேற்படி வழிகாட்டுதலை இந்த வழக்கில் இந்த நீதிமன்றம் பணிந்து பின்பற்றுகிறது. எலும்பு முறிவு என்பதை நிரூபணம் செய்ய நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு மேற்படி காயம் கொடுங்காயம் என்பதை நிரூபிக்க தவறும்பட்சத்தில் அதை கொடுங்காயமாக கருத இயலாது என்பது தெளிவாக தெரிய வருகிறது. நுண்கதிர் படத்தை இந்த நீதிமன்றத்தில் சமர்பிக்க முயற்சி மேற்கொள்ளாதது ஏன்? என்பதற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் எதிரிகளிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை என்று அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது போல 2-ம் எதிரி பயங்கர ஆயுதத்தை பயன்படுத்தி அ.சா.1 க்கு காயத்தை விளைவித்தார் என்ற முடிவிற்கு இந்த நீதிமன்றத்தால் வர இயலவில்லை. பொதுவாக இது போன்ற வழக்குகளில், ஆயுதங்கள் முன்னிலைப்படுத்த இயலாத சூழ்நிலையில் கூட, சாட்சிகளின் சாட்சியம் தெளிவாக இருக்கும் பட்சத்தில் ஆயுதங்களை குறித்து

நீதிமன்றங்கள் தீர்மானிக்கலாம். ஆனால் இந்த வழக்கில் தாக்கிய ஆயுதம் குறித்து காயம் பட்ட சாட்சிகள் சற்று முன்னுக்குப் பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளனர்.

23) மேலும் இந்த வழக்கில் எதிரிகள் / மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் இந்த வாதத்திற்கு ஆதரவாக கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் கோடிட்டு காட்டப்பட்டுள்ளன.

1)2021 Latest Caselaw 16474 Mad

Judgement Date : 12 August, 2021

Madras High Court

M.Prabakaran vs State Through on 12 August, 2021

என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

since PW7 has not produced the X-ray report for the injured, but determined the injuries sustained by the injured as grievous. Further, PW7 stated that PW1 himself came to the hospital. But PW1 during his evidence stated that he was taken to the Government Hospital by his Uncle. Hence, this Court is of the considered view that PW7 evidence is not corroborated with the evidence of PW1.

என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

2) [(2017) 4 MLJ (Crl) 746]

LNIND 2017 BMM 1583

BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

Present:

Hon'ble Mr. Justice A.M. Basheer Ahamed

Crl. A. (MD) No. 512 of 2008

3rd November, 2017

Gopal @ Gopalakrishnan

... Appellant/Accused

Versus

State, Rep. by The Inspector of Police,

Lalgudi Police Station, Crime No. 290 / 2007

... Respondent/Complainant என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்,

"Grievous Hurt – Evidence of – Indian Penal Code 1860, Sections 326, 294(b), 341 and 307 – Appellant/sole accused convicted by Trial Court under Section 326 for causing grievous hurt – Appeal against conviction – Whether conviction of Appellant under Section 326 justified – Held, recovery of blood strained weapons and shirt is not proved – Admitted portion of confession of accused marked through P.W.11 lead to recovery of material objects, is inadmissible – Trial Court relied on medical evidence and convicted accused – X-rays taken for showing bone fracture, as stated by P.W.10, not produced and no reason assigned for non-production of x-rays of P.W.2 during evidence by prosecution – Certain contradiction in respect of injuries sustained by P.W.2 in occurrence between ocular evidence of P.W.2 and medical evidence – Charge under Section 326 not proved – Appeal allowed." **என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.**

**எனவே மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் முன் வைத்துள்ள வழிகாட்டுதலின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சிய சான்றாவணங்கள் அடிப்படையிலும், 2-ம் எதிரி இதச பிரிவு. 326 ன்படி அ.சா.1 ன் இடது கையின் விரலில் எலும்பு முறிவு ஏற்படுத்தி, கொடுங்காயத்தை விளைவித்துள்ளார் என்ற சங்கதி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மாறாக அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தை பிரிவு. 324-ன்படி பயங்கர**

ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்ட சாதாரண காயமாகவே இந்த நீதிமன்றம் கருத வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட இதச பிரிவு.324 ன்படி 2-ம் எதிரிக்கு தண்டனை வழங்கலாம் என்றே இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24) இந்த மேல்முறையீட்டு வழக்கில் எதிரிகள் / மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், மருத்துவர் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், சாட்சிகள் தங்களை தாக்கிய நபர்களின் எண்ணிக்கை குறித்து முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், பிரிவு 294(பி) இ.த.ச படியான குற்றச்சாட்டு இந்த வழக்கில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், ஆயுதங்கள் கைப்பற்றப்படாதது வழக்கை பாதிக்கிறது என்றும், வாதிட்டார். அவர்களது வாதத்திற்கு ஆதரவாக கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் கோடிட்டு காட்டப்பட்டுள்ளன.

3) Subramani v. State rep. by the S.I. of Police, Kuvattur P.S., Chengalpattu Dist.
Crl.R.C. No. 679 of 1999 | In the High Court of Madras,
September 20, 2000 | N. Dhinakar, J.
2000 (3) MWN (Cr.) 66

என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

“Indian Penal Code, S. 326 — Conviction under — Sustainability — Petitioner alleged to have picked up a quarrel and fisted P.W.1 with an iron ring — Occurrence taking place on 19.6.1994, but the FIR registered as a crime only on 15.7.1994 — Prosecution case that a complaint was given by P.W.1 on 19.6.1994 itself, but it was

treated as a petition and an entry was made in the General Diary of the Police Station, and the FIR was registered on 15.7.1994 on the basis of Ex.P.1 given on 19.6.1994 — No explanation as to why the complaint was treated as a petition and an entry in the General Diary was made — General Diary not produced, nor marked as a document — General Diary being an important document on the facts of the case, production of which alone would have substantiated the prosecution version that a 'complaint' was given on 19.6.1994 and the same was treated as a petition — Iron ring as the weapon of offence not mentioned before the Doctor when she questioned P.W.1 as to the cause of injury — P.W.1 informed the Doctor that she was beaten by 10 persons, the fact not found in Ex.P.1 — Prosecution version, held, not acceptable — Conviction set aside. Finding — Revision allowed.” என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

4) 2007(3) Crimes 8 (Mad.)

MADRAS HIGH COURT

P. Murgesan, J.

Senthil Kumar & Anr. —Petitioners

versus

State —Respondent

Crl.R.C. (MD) No. 153 of 2006 and

MP (MD) No. 1122 of 2006

என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

Decided on 18-4-2007

“Indian Penal Code, 1860—Sections 324 and 323—Accused petitioner while attending marriage in house of PW1 created trouble in meal section and assaulted PW1 and PW2—Conviction by Courts below—Revision—Corrections were made in FIR's investigating Officer did not enquire about those corrections in FIR—I.O. did not recover material objects—Though FIR was lodged on 26.5.2002 at 14.30 hours

but it was sent to Magistrate on 29.5.2002 at 10.30 hours—Discrepancy in scene of occurrence as according to prosecution case occurrence took place in marriage panthal but witnesses spoke to doctor that occurrence took place in house—PW4 had turned hostile—Prosecution could not be said to have proved its charge—Conviction was liable to be set aside. (Paras 10 to 14)

Result : Revision allowed.”

என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

5) 2010-2-L.W. (Crl.) 1434

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

8.12.2009 / Crl.O.P.No.6699 of 2006

K. Mohan Ram, J.

R. Ramesh ... Petitioner

-Vs.-

State by Inspector of Police, Kachirapalayam P.S., Villupuram District. ... Respondent

என்ற வழக்கின் முன் தீர்ப்பில், மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்,

“Held: considering the allegations contained in the charge sheet and in the FIR and the statement of witnesses; Court is of the considered view that the ingredients of the offences under Sections 294 B and 506(ii) are not made out.

A perusal of the complaint/FIR does not show that on hearing the obscene words which were uttered by the accused, the witnesses felt annoyed, and in the statements of witnesses G and R, they have not stated that on hearing the obscene words they felt annoyed, and in the absence of legal evidence to show that the words uttered by the accused annoyed others, it cannot be said that the ingredients of the offence under Section 294 B I.P.C. are made out.

Similarly, neither in the complaint nor in the statement of witnesses it has been stated that when the accused uttered the words threatening the complainant, he did not feel

threatened actually. Further, it is not alleged in the complaint that except the utterances, there was actual attempt on the part of the accused to assault the accused — Therefore the ingredients of the offences alleged under Section 506(ii) are also not attracted — Crl.O.P. allowed.”

**என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.**

6) 1996 (I) CTC 470

IN THE HIGH COURT OF MADRAS

Karpagavinayagam, J.

Criminal Revision Case No. 657 of 1993

Criminal Revision Petition No. 656 of 1993

15.2.1996

K. Jayaramanuju ... Petitioner

Vs.

Janakaraj & another ... Respondents

**என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்**

Code of Criminal Procedure, 1973, Sections 397 and 401 — Revision against acquittal preferred by private party in police case — Revisional Court should not interfere with findings of fact. (Para 5)

Indian Penal Code, 1861, Section 294 — Uttering obscene words to the annoyance of others — Ingredients of offence — Mere utterance of obscene words are not sufficient — Proof to establish that it was to annoyance of others is necessary — (Para 5)

**என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.**

7) 2009 (3) MWN (Cr.) 369

IN THE HIGH COURT MADRAS

[Madurai Bench]

C.T. Selvam, J.

Crl.R.C.(MD) No.513 of 2007

02.09.2009

Thirulogachandar

v.

State, represented by the Sub-Inspector of Police, Sengippatti Police Station, Thanjavur District (Crime No.5 of 2004)

I.P.C., s.324

என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை கிளையானது

"Revision against order of conviction as confirmed by Lower Appellate Court.
INDIAN PENAL CODE, 1860, S.324 — Conviction under — Confirmed by First Appellate Court but sentence of one year's S.I. modified to 5 months' S.I. — Revision against — Neither genesis of occurrence nor place of occurrence certain — FIR delayed by 3 days in reaching Court — Interpolation made in FIR to suit prosecution case — Suppression of Complaint given by Accused — Animosity between prosecution party and accused revealed by P.W.2/wife of P.W.1/injured — Absence of blood stains at place of occurrence — Non-recovery of weapons used — Conviction & sentence set aside — Revision allowed. (Paras 6 & 7)"

என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

8) (2017) 1 MLJ (Crl) 590

LNIND 2016 MAD 2349

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

Present:

Hon'ble Mr. Justice M. Venugopal

Crl. A. No. 499 of 2015 18th October, 2016

J. Palanivel ... Petitioner

Versus

State, rep. By The Sub Inspector of Police, Mothikonpalayam Police Station, Dharmapuri District and Others ... Respondent

**என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்**

“Hurt – Hurt by Dangerous Weapons – Lack of Evidence – Indian Penal Code, 1860 (Code 1860), Sections 294(b) and 324 – Code of Criminal Procedure, 1973 (Code 1973), Section 248(1) – Trial Court found A1 and A2 not guilty of offences under Section 294(b), 324 of Code and acquitted them of all charges – Appeal preferred by Appellant/ Defacto Complainant challenging the acquittal – Whether Trial Court justified in acquitting Accused for offence committed on basis of lack of evidence – Held, onus was on the prosecution to prove against Accused beyond all reasonable doubts – Story of prosecution cannot be believed even if there was simmering doubt – Criminal liability could not be fastened on Accused either in causal or cavalier fashion – Evidence of prosecution witnesses were at variance with one another – Stones used were not seized by 1st Respondent/Prosecution – Trial Court rightly found Accused not guilty of offences under Sections 294(b), 324 of Code, 1860 on consideration of entire oral and documentary material available on record – Acquittal of Accused under Section 248(1) of Code, 1973 free from legal infirmities – Trial Court’s judgment affirmed – Appeal dismissed.”

**என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.**

9) 2015 (2) MWN (Cr.) 199

IN THE HIGH COURT OF MADRAS

(Madurai Bench)

R. Mala, J.

Crl.R.C.(MD) No.452 of 2009

3.12.2014

Rajendran. 2. Anbalagan. 3. Gunasekaran ... Petitioners

Vs.

State by the Sub-Inspector of Police, Papanasam Police Station, Thanjavur District,

Crime No.254 of 2003 ... Respondent

**என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்**

"Conviction — Revision against

Delay in filing of Complaint and dispatching of FIR to Court — Injuries suffered by PWs.1 to 3 not proved — Evidence of PW2 not corroborated by PWs.1 & 3 — Failure of prosecution to prove its case beyond reasonable doubt — Accused, held, entitled to benefit of doubt.

INDIAN PENAL CODE, 1860 (45 of 1860), Sections 452 & 324 — Conviction under — Sustainability — Accused allegedly armed with weapons trespassed into house of PW1 and damaged household properties — A1 assaulted PW2 with Aruval on his head, A2 assaulted PW1 with crowbar on his hands and legs and A1 assaulted PW3 — Accused after damaging properties to tune of ₹30,000 and assaulting PWs.1 to 3, fled away — Alleged occurrence though took place on 13/14.9.2003 at 00:00 hours, FIR lodged only on 15.9.2003 at 2 p.m. and same reached Court at 9 p.a. — Inordinate delay in preferring Complaint as also delay in dispatching FIR to Court, held, fatal to prosecution case — Further, PWs.1 to 3 allegedly sustained injuries, except PW1 no one treated by Doctor/PW6 — Accident Register copies of PWs.1 to 3 not produced before Court — Evidence of PW2 not corroborated by PWs.1 & 3 — In such circumstances, held, guilt of A1 for offence under Section 324 not proved beyond reasonable doubt and Accused entitled to benefit of doubt — Conviction set aside. (Paras 10 to 15)"

**என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.**

10) (2022) 1 MLJ (Crl) 460

LNIND 2021 BMM 1474

BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

Present:

Hon'ble Mr. Justice R. Pongiappan

Crl.A.(MD) No. 430 of 2016

Sundarapandian and Another ... Appellants

Versus

State Rep. by Deputy Superintendent of Police and Another ... Respondents

17th September, 2021

**என்ற வழக்கின் முன் தீர்ப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம்**

"Voluntarily Causing Hurt – Appeal against Conviction – Indian Penal Code 1860, Sections 323 and 324 – SC/ST (POA) Act, 1989, Section 3(i)(x) – Trial Court convicted and sentenced accused 1 under Section 323 of IPC and accused 2 under Section 324 of IPC, hence this appeal – Whether, conviction and sentence imposed on Appellants liable to be set aside – Held, at time of occurrence, accused 2 bite victims and caused simple injury – In respect to causing of bite injury cited by doctor, evidence given by victim was fully in support of case of prosecution – Alleged occurrence had happened on specified date and thereafter, case has been registered on same day for offence under Section 323, 324 and 506(ii) I.P.C., r/w Section 3(i)(x) of Act – In respect to delay in sending FIR to Court, both officers, who register and investigate case had not given any explanation, and same was fatal to prosecution – Also for delay occurred in sending FIR, no flexible explanation offered from side of prosecution – Medical evidence given by doctor was varied in respect to Appellant 1 and also evidence given by victim in respect to attack made by accused was found inconsistent – Trial Court without considering said aspect convicted Appellants under Sections 323 and 324 of IPC – Case beyond reasonable doubt failed to prove by prosecution – Conviction and sentence imposed on Appellants set aside and they acquitted of all alleged charges – Appeal allowed." **என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது. எனினும் இந்த வழக்கின் பொருண்மைகளை கவனத்துடன் பரிசீலனை செய்ததில், மேற்கண்ட முன் தீர்ப்புகள் இந்த வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தக்கூடியவில்லை என்று இந்த மேல்முறையீட்டு**

நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

25) எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் 1, 3, 4 எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட இதச பிரிவு. 294(பி), 506(2) -ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், 1, 3, 4 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 324-ன் படியான குற்றச்சாட்டும், 2-ம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 294(பி)-ன் படியான குற்றச்சாட்டும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 2-ம் எதிரி மீது இதச பிரிவு. 326-ன்படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், மாறாக எதிரி மீதான இதச பிரிவு.324-ன் படியான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்-1க்கு தீர்வு காண்கிறது.

**<u>26) பிரச்சனை எண்-2 க்கான பரிசீலனையும், தீர்வும்:-</u>**

இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் சென்ற பிரச்சனையிலேயே அரசு தரப்பில் 1, 3, 4 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 324-ன் படியான குற்றச்சாட்டும், 2-ம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 294(பி)-ன் படியான குற்றச்சாட்டும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 2-ம் எதிரி மீது இதச பிரிவு. 326-ன்படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், மாறாக எதிரி மீதான இதச பிரிவு.324-ன் படியான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், தீர்வு கண்டுள்ளது. எனினும், இவ்வழக்கின் சூழ்நிலை, தன்மை, எதிரியின் வயது, ஆகியவற்றை விசாரணை நீதிமன்றம் சரிவர கவனத்தில்

கொள்ளவில்லை என்ற மேல்முறையீட்டாளர்கள்/எதிரிகள் தரப்பு வாதம் ஏற்புக்குரியது என்றே இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் கருதுகிறது. மேலும் விசாரணை நீதிமன்றம் நன்னடத்தை சட்டம்-1948-ன் பலன்களை எதிரிகளுக்கு அளிக்காததற்கு உரிய காரணத்தை தனது தீர்ப்புரையில் தெரிவிக்கவில்லை. மேலும் மேல்முறையீட்டாளர்/எதிரி முதல் முறை குற்றமிழைத்தவர் என்பதையும், விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. தற்போதைய நிலையில் வழக்கின் சூழ்நிலை, எதிரியின் வயது, எதிரி முதல் முறையாக குற்றம் செய்தவர், ஆகிய சூழ்நிலைகளை கவனத்துடன் பரிசீலனை செய்ததில், எதிரியின் சிறை தண்டனையை மாற்றம் செய்து, அபராத தொகை மட்டுமே விதிக்கலாம் என்றும், விசாரணை நீதிமன்றம் அளித்த தீர்ப்புரையை மாற்றியமைக்கலாம் என்றும், இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்கள்/எதிரிகளுக்கு எதிராக பிறப்பித்த தீர்ப்புரை சரியானதல்ல, பகுதியாக மாற்றியமைக்கத்தக்கது என்றே இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்-2 க்கு தீர்வு காண்கிறது.

**27) பிரச்சனை எண்- 3 க்கான பரிசீலனையும், தீர்வும்:-**

இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் பிரச்சனை எண்- 2 ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண். 141/2024 வழக்கில், விசாரணை நீதிமன்றம் எதிரிகளுக்கு/மேல்முறையீட்டாளர்களுக்கு சிறை தண்டனை வழங்கி பிறப்பித்த தீர்ப்புரை சரியானதல்ல, பகுதியாக மாற்றியமைக்கத்தக்கது, என்று தீர்வு கண்டுள்ள நிலையில், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை பகுதியாக மாற்றியமைக்கத்தக்கது

என்றே இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்-3 க்கு தீர்வு காண்கிறது.

இறுதியாக மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில்,

1) இந்த மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2) மேல்முறையீட்டாளர் / 2-ம் எதிரிக்கு எதிராக இதச. பிரிவு . 326 பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றம் வழங்கிய சிறை தண்டனை மற்றும் அபராதம் ரத்து செய்யப்படுகிறது.

3) மேல் முறையீட்டாளர்கள் / 1, 3, 4 எதிரிகளுக்கு எதிராக இதச. பிரிவு . 324 பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றம் வழங்கிய சிறை தண்டனை ரத்து செய்யப்பட்டு அபராத தண்டனையாக மாற்றியமைக்கப்படுகிறது.

4) மேல்முறையீட்டாளர் / 2-ம் எதிரி இதச. பிரிவு. 324 ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து மேற்படி இதச பிரிவு 324-ன் படியான குற்றச்சாட்டிற்கு தலா ரூ.10,000/- அபராதம் விதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி அபராத தொகையை கட்ட தவறினால் 1 மாத காலம் மெய் காவல் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

5) மேல்முறையீட்டாளர் / 2ம் எதிரிக்கு இதச பிரிவு. 294(பி) ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.2,000/- அபராதம் விதித்தும், மேற்படி அபராத தொகையை கட்ட தவறினால் 1 வார காலம் மெய் காவல் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

6) மேல் முறையீட்டாளர்கள்/ 1, 3, 4 எதிரிகள் இதச. பிரிவு. 324-ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து, மேற்படி இதச பிரிவு 324-ன் படியான குற்றச்சாட்டிற்கு ரூ.10,000/- அபராதம் விதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி அபராத தொகையை கட்ட தவறினால் 1 மாத காலம் மெய் காவல் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

7) மேல்முறையீட்டாளர்கள் / எதிரிகளிடமிருந்து பெறப்படும் அபராத தொகை ரூ. 42,000/-ல் காயமுற்ற அ.சா.1 க்கு ரூ.20,000/-மும், அ.சா.2, அ.சா.3-க்கு தலா ரூ.10,000/-மும் நஷ்ட ஈட்டு தொகையாக கு.வி.மு.ச பிரிவு. 357(1) ன் படி வழங்க உத்தரவிடப்படுகிறது.

8) மேல்முறையீட்டாளர் / எதிரி அபராத தொகையை செலுத்த 1 மாத கால அவகாசம் அளிக்கப்படுகிறது. எதிரி ஏற்கனவே அபராத தொகையை கட்டியிருந்தால் அந்த

அபராத தொகையை கழித்துக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. அபராத தொகையை கட்ட தவறினால் விசாரணை நீதிமன்றம் அந்த தொகையை வசூலிக்க சிறை தண்டனை நடவடிக்கை எடுக்கலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு என்னால் 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJASIMMAVARMAN S

Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.05.06 10:33:38 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.